# 12

# வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகை

TML 012

ஒன்ராறியோவில் பெண்களுக்குரிய குடும்பச் சட்டம்



## எல்லோரும் பெண்கள்.
## ஒரே குடும்பச் சட்டம்.

அறியுங்கள் உங்கள் உரிமைகளை.

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

# வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகை

*இந்த சிறுநூல் சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் அடிப்படையான ஒரு விளக்கத்தை உங்களுக்குத் தரும் நோக்கத்துடன் வரையப்பட்டு உள்ளது. தனிப்பட்ட முறையிலான சட்ட ஆலோசனை மற்றும் உதவி என்பவற்றுக்கு இணையான ஒரு மாற்றீடாக இதனைக் கருத முடியாது. குடும்பச் சட்டம் தொடர்பிலான பிரச்சினைகளை நீங்கள் எதிர்கொள்ளும் பொழுது உங்கள் உரிமைகளைக் காப்பதற்காக, உங்களால் முடிந்த அளவு விரைவாக சட்ட ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள். குடும்பச் சட்ட சட்டத்தரணி ஒருவரைக் கண்டுபிடித்து அவருக்குக் கட்டணமாக பணம் செலுத்துவது எப்படி என்பது பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு www.onefamilylaw.ca என்ற எமது இணையத் தளத்தில் காணப்படும் "குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல்" என்ற சிறுநூலைப் படியுங்கள்.*

## வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகை என்றால் என்ன?

வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகை (Spousal support) என்பது தமது உறவு அறும்பொழுது ஒரு வாழ்க்கைத் துணையாள் (spouse) மற்றவருக்குச் செலுத்தும் பணம் ஆகும். வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகை என்பது இருவரில் பொருளாதார வசதி குறைந்த வாழ்க்கைத் துணையாளின் நன்மைக்காக வழங்கப்படுகிறது. ஆதார உதவித் தொகையைச் செலுத்துபவர் **பணம் கொடுப்பவர்** (payor) என அழைக்கப்படுகிறார். ஆதார உதவித் தொகையைப் பெறுபவர் **ஆதரவிலிருக்கும்** வாழ்க்கைத் துணையாள் (dependent spouse) எனப்படுகிறார்.

வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகை என்பது ஒரே தடவையில் ஒன்று சேரக் கொடுக்கும் ஒரு தொகையாகவும் இருக்கலாம், அல்லது மாதத்துக்கு ஒரு முறை போன்று கிரமமான கால இடைவெளிகளில் கொடுக்கும் தொகையாகவும் இருக்கலாம். ஆதார உதவித் தொகை குறித்த காலத்துக்கு மட்டும் கொடுக்கப்படுவது ஆகவும் இருக்கலாம் அல்லது முடிவுத் திகதி என்று ஒன்று அதற்கு இல்லாமலும் அமையலாம்.

வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகை உங்கள் வருமான வரியைப் பாதிக்கிறது. நீங்கள் துணையாள் உதவித் தொகையைக் கொடுப்பவராக இருந்தால் அந்த உதவித் தொகையை வருமான வரிக் குறைப்புக்காகக் பயன்படுத்தலாம். நீங்கள் துணையாள் உதவித் தொகையை வாங்குபவராக இருந்தால் நீங்கள் அவ்வாறு கிடைக்கும் பணத்தை வரிக்குட்பட்ட வருமானமாக அறிவிக்க வேண்டும்.

நீங்களும் உங்கள் துணையாளும் பிரியும் பொழுது ஆதார உதவித் தொகை சம்பந்தமாக உங்கள் சொந்த ஒப்பந்தத்தை தயாரிக்கலாம். இந்த ஒப்பந்தத்தை எழுதுவதற்கு சட்டத்தரணிகள் தேவையில்லை. அதுபற்றி நீங்கள் இணக்கம் காணமுடியாது இருந்தால், அல்லது உங்கள் ஒப்பந்தம் முறியுமானால் நீங்கள் துணையாள் ஆதார உதவித் தொகை வழங்குவதற்கு உத்தரவிடுமாறு நீதிமன்றத்தைக் கேட்கலாம்.

உங்கள் குடும்பத்திடம் பணவசதி அதிகம் இல்லை என்றால் வாழ்க்கைத் துணையாள் ஆதாரத் தொகை வாங்குவதற்கான ஒரு உத்தரவைப் பெறுவது கஷ்டமாக அமையலாம். பிள்ளை ஆதார உதவித் தொகை முதலில் செலுத்தப்பட வேண்டும் என்று சட்டம் எதிர்பார்க்கிறது. உங்கள் வாழ்க்கைத் துணையாளிடம் பிள்ளை ஆதார உதவித் தொகை செலுத்திய பின்னர் போதிய அளவு பணம் மிச்சமாக இருந்தால் மட்டுமே வாழ்க்கைத் துணையாள் உதவித் தொகைக்கான உங்கள் வேண்டுகோளை நீதிமன்றம் கருத்தில் கொள்ளும்.

## வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகையை யார் கேட்க முடியும்?

நீங்கள் உங்கள் துணைவரோடு திருமணம் செய்து இருந்தால், வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகை கேட்க முடியும். நீங்களும் உங்கள் துணைவரும் திருமணம் செய்யாது ஒன்றாக வாழ்ந்து, சட்டத்தின் படி “பொதுச்சட்ட” வாழ்க்கைத் துணையாள் என்பதன் வரைவிலக்கணத்துக்குள் அடங்குவீர்கள் என்றால் நீங்களும் வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகை கேட்கலாம்.

ஒரு பொதுச்சட்ட வாழ்க்கைத் துணையாளுக்கு *குடும்பச் சட்ட சட்டவாக்கம் (Family Law Act)* இவ்வாறு வரைவிலக்கணம் கூறுகிறது:

- நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணையாளும் ஆகக் குறைந்தது மூன்று வருடங்களுக்காவது ஒன்றாக வாழ்ந்து இருக்கிறீர்கள் அல்லது.
- நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணையாளும் ஒரு நிலையான உறவைக் கொண்டிருந்து உங்களுக்கு ஒரு பிள்ளை இருக்கிறது, அல்லது ஒரு பிள்ளையைச் சுவீகாரம் எடுத்து இருக்கிறீர்கள்.
- உங்களுடைய வாழ்க்கைத் துணைவர் ஒரு ஆணாகவும் இருக்கலாம் அல்லது பெண்ணாகவும் இருக்கலாம்.

## வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகையை நீதிமன்றங்கள் ஏன் வழங்குகின்றன?

உங்கள் உறவு முறியும் பொழுது உங்களில் ஒருவர் பொருளாதார ரீதியில் மற்றவரை விட உயர்வாக இருக்கலாம். திருமணம் செய்து இருந்த காலத்தில் நீங்கள் எவ்வாறு குடும்பப் பொறுப்புகளை பங்கிட்டுக் கொண்டீர்கள் என்பது இந்த நிலைக்கு காரணமாக இருக்கலாம். உதாரணமாக, நீங்கள் பிள்ளைகளை வளர்ப்பதற்காக வீட்டில் தங்கியிருந்து வந்தீர்கள் என்றால் நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையாளின் அளவுக்குப் பணம் சம்பாதித்து இருக்க மாட்டீர்கள். உங்கள் வாழ்க்கைத் துணையாள் படித்து உயர்ந்த சம்பளம் தரும் வேலை ஒன்றை எடுக்க வேண்டும் என்பதற்காக, நீங்கள் குறைவான சம்பளம் தரும் வேலையை ஏற்றிருக்கக் கூடும்.

இம்மாதிரியான சந்தர்ப்பங்களில், உங்கள் உறவு அறுந்த பின்னரும் கூட, உங்கள் வாழ்க்கைத் துணையாள் சிறிது காலத்துக்கு உங்களை ஆதரிக்க உதவ வேண்டும் என்று நீதிமன்றம் தீர்மானிக்கலாம். இதன் அர்த்தம் நீங்கள் உங்களைத் தாங்கிக் கொள்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லை என்பதல்ல. உங்களுடைய சிறப்பான செயற்திறன் அளவுக்கு நீங்கள் உழைத்து பொருளாதார சுதந்திரம் அடையவேண்டும் என்று நீதிமன்றம் எதிர்பார்க்கிறது.

## வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகையை நீதிமன்றங்கள் எப்பொழுது வழங்குகின்றன?

உங்களுக்கு ஆதார உதவி வழங்க வேண்டுமா என்று நீதிமன்றம் தீர்மானிக்கும் பொழுது, அது கருத்தில் எடுக்க வேண்டிய விடயங்களை சட்டம் பட்டியலிட்டுக் கூறியுள்ளது. நீதிமன்றம் கருதவேண்டியவற்றில் இவை சிலவாகும்:

- எவ்வளவு காலமாக நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணையாளும் ஒன்றாக வாழ்ந்தீர்கள் அல்லது மணமுடித்து இருந்தீர்கள்?
- உங்கள் உறவுக்கு உங்களில் ஒவ்வொருவரும் என்ன பங்களிப்புச் செய்து உதவினீர்கள்?
- ஆதார உதவிபற்றி உங்களிடையே பின்பற்ற ஏதாவது உத்தரவு அல்லது ஒப்பந்தம் இருந்ததா? உதாரணம்: குடும்பச் சார்பு உடன்படிக்கை.

உங்கள் வாழ்க்கைத் துணையாள் உங்களுக்கு ஆதார உதவித் தொகை தரவேண்டுமா அல்லது அவர் தரவேண்டிய உதவித் தொகையின் அளவுதான் என்ன என்பதுக்கும் அவரது நடத்தைக்கும் எந்தவித தொடர்பும் இருக்க மாட்டாது.

## நீதிமன்றங்கள் வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகையை வழங்கும் பொழுது எவற்றைக் கவனத்தில் எடுக்கின்றன?

உங்களது வாழ்க்கைத் துணையாள் உங்களுக்கு எவ்வளவு ஆதார உதவித் தொகையை வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் தீர்மானிக்கும் பொழுது, அது கருத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சட்டம் சொல்லும் விடயங்களில் சில இங்கு தரப்பட்டு உள்ளன:

- உங்களில் ஒவ்வொருவரும் சொத்தாக எவ்வளவு வைத்து இருக்கிறீர்கள் மற்றும் எவ்வளவு உழைக்க முடியும்?
- எவ்வளவு காலமாக நீங்கள் திருமணம் செய்து இருந்தீர்கள், அல்லது ஒன்றாகச் சேர்ந்து வாழ்ந்து வந்தீர்கள்?
- உங்கள் வயதும் ஆரோக்கிய நிலையும்
- உங்கள் சொந்தப் பராமரிப்புக்கு என நீங்கள் எவ்வளவு வழங்க முடியும்?
- ஆதார உதவித் தொகை வழங்கக் கூடிய ஒரு நிலையில் உங்கள் வாழ்க்கைத் துணையாள் இருக்கிறாரா?
- உங்களை நீங்களே ஆதரித்துக் கொள்ளும் நிலையடைய எவ்வளவு காலம் செல்லும்? அதற்குள் எவ்வளவு செலவு ஆகும்?
- உங்கள் வாழ்க்கைத் துணையாள் இப்பொழுது பெற்றிருக்கும் தொழில் மற்றும் வருமானம் என்பவற்றை அவர் அடைய நீங்கள் செய்த எவை உதவின?
- உங்களில் ஒருவர் வீட்டில் ஒரு பிள்ளையுடன் தங்க வேண்டிய தேவை இருக்கிறதா?
- உங்கள் உறவு காலத்தின் பொழுது உங்களில் ஒவ்வொருவரும் என்ன வகையான குழந்தைப் பராமரிப்பு கடமைகளுக்குப் பொறுப்பாக இருந்தீர்கள்?
- உங்கள் உறவில் அடங்கியிருந்த உங்களின் பொறுப்புக்களினால் ஒரு வருமானத்தை நீங்கள் உழைத்து எடுக்கும் உங்கள் திறன் எவ்வாறு பாதிக்கப்பட்டது?

வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகைக்கு நீங்கள் விண்ணப்பிக்கும் பொழுது, உங்கள் துணைவரின் பொருளாதார நிலைமை பற்றிய உண்மைகளை அறியும் உரிமையை நீங்கள் பெறுவீர்கள். இது **முழுமையான நிதி நிலைமை விபரவெளியீடு** (full financial disclosure) என்று கூறப்படும்.

## வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகையின் அளவு எவ்வளவாக இருக்கும்?

கடந்த காலங்களில் வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகை பற்றிய சட்டம் தெளிவற்று இருந்தது. கனடா முழுவதும் பரவியிருக்கும் குடும்ப நீதிமன்றங்கள், எப்பொழுது ஆதார உதவித் தொகை வழங்கப்பட வேண்டும், அது எந்த அளவில் இருக்க வேண்டும், அதனை எவ்வளவு காலம் கொடுக்க வேண்டும் என்பன பற்றிப் பல வேறுபட்ட தீர்மானங்களை எடுத்து வந்தன. இது சம்பந்தப்பட்ட சட்டத்தினை மேலும் கூடுதலான முறையில் முரண்பாடின்றி இருக்கும்படி செய்வதற்காக மத்திய சமஷ்டி அரசின் நீதி அமைச்சு **வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகை வழிநடத்தல்கள்** (Spousal Support Guidelines – SSG) என்ற விதிமுறைகளைத் தயாரித்து உள்ளது.

பல்வேறு சூழ்நிலைகளின் கீழ் கொடுக்கப்பட வேண்டிய மிகக் கூடியதும் மிகக் குறைந்ததும் ஆன ஆதார உதவித் தொகைகளை SSG பட்டியலிட்டுக் கூறுகிறது. இவ்வாறான தொகைகளின் அளவு, எவ்வளவு காலம் நீங்கள் ஒன்றாக வாழ்ந்தீர்கள், எத்தனை பிள்ளைகள் பெற்றீர்கள், உங்களில் ஒவ்வொருவரும் என்ன வகையான வேலை செய்தீர்கள், எவ்வளவு சம்பளமாக நீங்கள் ஒவ்வொருவரும் உழைத்தீர்கள் என்பன போன்ற விடயங்களில் தங்கி உள்ளது. இவ்வழிநடத்தல்கள் சட்டமாக அமைக்கப்படவில்லை. எனினும் பெரும்பாலான சட்டத்தரணிகளும் நீதிபதிகளும் எந்த அளவு ஆதார உதவி நியாயமானதாக அமையும் எனத் தீர்மானிக்க இவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

## வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகை பற்றிய உத்தரவுகளை யார் நிறைவேற்றுவது?

வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவிக்கான உத்தரவுகளை **குடும்பப் பொறுப்பதிகாரப் பணியகம்** (Family Responsibility Office – FRO) நிறைவேற்றுகிறது. பிள்ளை ஆதார உதவித் தொகை உத்தரவுகளை நிறைவேற்றும் மாகாண அரசுக் காரியாலயமும் இதுவேதான்.

வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகைக்கான நீதிமன்ற உத்தரவு ஒவ்வொன்றும் சுயமுறையில் தானாகவே FRO பணியகத்தில் பதியப்படுகின்றது. நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணையாளும் ஆதார உதவி பற்றி ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து இருந்தால், அதன் பிரதியை நீங்களும் FRO காரியாலயத்தில் நிறைவேற்றுதற்காகப் பதிவு செய்து கொள்ள முடியும்.

## FRO பணியகம் எப்படிச் செயல்படுகிறது?

ஆதார உதவிக்கான உத்தரவு ஒன்று பதிவு செய்யப்பட்டதும், பணம் கொடுப்பவர் எல்லாக் கொடுப்பனவுகளையும் FRO பணியகத்துக்கு அனுப்ப வேண்டும். FRO பணியகத்தில் பணம் கிடைத்ததும் அதனை பணம்பெறும் வாழ்க்கைத் துணையாளுக்கு பணியகம் அனுப்பி வைக்கிறது.

FRO பணியகத்தில் பல கோவைகள் இருந்து வருகின்றன. இப்பணியகம் மிகுந்த வேலைப் பழுவுடன் இயங்கும் காரணத்தால், உத்தரவைப் பதிவு செய்த பின்னர் ஆதார உதவித்தொகைப் பணம் உங்களுக்கு வருவதற்கு ஆரம்பிக்கப் பல மாதங்கள் நீங்கள் காத்திருக்க வேண்டி ஏற்படலாம்.

## பணம் கொடுப்பவர் பணம் செலுத்தத் தவறினால் என்ன நடக்கும்?

சில சமயங்களில் பணம் கொடுப்பவர் பணம் செலுத்தத் தாமதம் ஆகலாம், அல்லது செலுத்தத் தவறிவிடலாம். பணம் அறவிடுதற்கு FRO பணியகம் கையாளும் முறை இப்படி இருக்கும்:

- பணம் கொடுப்பவர் வேலை செய்கிறார் என்றால், அவரது சம்பளத்தில் இருந்து பிள்ளை ஆதார உதவித் தொகையை எடுக்கும்படி அவருக்கு வேலை வழங்குபவருக்கு FRO பணியகம் உத்தரவிட முடியும்.
- பணம் கொடுப்பவர் வேலையற்று இருக்கிறார் அல்லது சுயமாகத் தொழில் செய்கிறார் என்றால், அவரது வங்கிக் கணக்கில் இருந்து FRO பணியகம் பணத்தினை எடுக்க முயற்சிக்கலாம். அவரது வங்கிக் கணக்கினுக்கு **அறவிடும் அறிக்கைவிடுதல்** (garnishing) என்று இது அழைக்கப்படுகிறது. அவருடைய சொந்தச் சொத்தாக இருக்கும் வாகனம் அல்லது வீடு போன்றவற்றின் மீது உரிமைக் கோரிக்கை (lien) ஒன்றையும் FRO பணியகம் விதிக்க முடியும். அப்படிச் செய்தால், குறிப்பிட்ட அச்சொத்தினை அவர் விற்க முயலும்பொழுது பணம்கொடுப்பவர் செலுத்தவேண்டி இருக்கும் தொகை FRO பணியகத்துக்கு வந்து சேரும்.
- பணம் கொடுப்பவர் எப்பொழுதும் தாமதித்துக் காசினைக் கட்டினால், அல்லது பிள்ளை ஆதார உதவித் தொகையாகக் கட்டாத பெருந்தொகை நிலுவையில் இருந்தால், அவரது வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரம் அல்லது வேட்டையாடல், மீன்பிடித்தல், போன்றவற்றுக்கான அனுமதிப்பத்திரங்கள் போன்றவற்றை இடைநிறுத்தி வைப்பதன் மூலம் FRO பணியகம் பணத்தைக் கட்டும்படி அவரை நிர்ப்பத்திக்க முடியும். அவரது கடவுச்சீட்டினை ரத்துச் செய்யவும் முடியும். வரி மீள்கொடுப்பனவு (tax refund) அல்லது தொழில் காப்புறுதி நன்மைகள் (employment insurance

benefits) போன்றவற்றுக்காக அவருக்கு அரசாங்கம் கொடுக்கவேண்டி உள்ள பணத்தையும் FRO பணியகம் எடுத்துக் கொள்ள முடியும்.

## பணம் கொடுப்பவர் ஒன்ராறியோவில் வசிக்கவில்லை என்றால் என்ன நடக்கும்?

உங்கள் வாழ்க்கைத் துணையாள் கனடாவில் அல்லது ஐக்கிய அமெரிக்காவில் எங்கிருந்தாலும் அவரிடம் இருந்து ஆதார உதவித் தொகையினை FRO பணியகம் அறவிட்டு உங்களுக்குத் தந்து உதவமுடியும். தமது எல்லைகளைக் கடந்து FRO பணியகம் ஆதார உதவித் தொகையைப் பெற்றெடுக்க அனுமதிக்கும் ஒப்பந்தத்தில் எல்லா மாகாணங்களும் அமெரிக்க மாநிலங்களும் கையெழுத்து இட்டுள்ளபடியால் இது சாத்தியம் ஆகிறது. பேர்முடா, கானா, ஹொங்கொங், செக் குடியரசு, மற்றும் ஐக்கிய இராச்சியம் போன்றவை உட்பட்ட வேறு நாடுகளுடனும் ஒன்ராறியோ இதுபோன்ற ஒப்பந்தங்களைச் செய்துள்ளது.

ஒன்ராறியோவுடன் ஒப்பந்தம் செய்திருக்காத ஒரு நாட்டில் உங்கள் வாழ்க்கைத் துணையாள் வாழுகிறார் என்றால், ஆதார உதவித் தொகைக்கான உத்தரவை நிறைவேற்றுவதில் FRO பணியகம் உங்களுக்கு உதவ முடியாது இருக்கும். இவ்வாறான நிலைமையில் ஆதார உதவியை நீங்கள் அறவிடுதற்கு ஒரேவழி பணம் கொடுப்பவர் வாழும் நாட்டுக்குரிய சட்டங்களைப் பயன்படுத்துவது ஆகும்.

*நீங்கள் பிரெஞ்சு மொழி பேசும் ஒரு பெண்ணாக ஒன்ராறியோவில் வாழ்ந்து வருகிறீர்கள் என்றால் குடும்பச் சட்ட நீதிமன்ற நடைமுறைகளின் பொழுது பிரெஞ்சு மொழியில் சேவைகளைப் பெறுகின்ற உரிமை உங்களுக்கு உண்டு. உங்கள் உரிமைகள் பற்றி நீங்கள் மேலதிக தகவல் பெறுவதற்கு ஒரு சட்டத்தரணி அல்லது ஒரு சமூக சட்ட உதவி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்: அல்லது பெமெயிட் (Femaide) என்று அழைக்கப்படும் ஆதாரத் தொலைபேசி இணைப்புடன் 1-877-336-2433 என்ற எண்ணிலும், செவிப்புலன் குறைந்தவர்கள் அதன் 1-866-860-7082 என்ற எண்ணிலும், தொடர்பு கொள்ளலாம். பிரெஞ்சு மொழியில் சேவைகள் பெறுவது எப்படி என்பது பற்றிய மேலதிக தகவலினை www.onefamilylaw.ca அல்லது www.undroitdefamille.ca. என்ற எங்கள் இணையத்தளத்திலும் நீங்கள் பார்க்க முடியும்.*

## பெறக்கூடியதாக உள்ள குடும்பச் சட்ட விடயங்களின் தலைப்புகள்*

1. மாற்றுமுறைச் சர்ச்சைத் தீர்வும் குடும்பச் சட்டமும் (TML 001)
2. பிள்ளைப் பாதுகாப்பும் குடும்பச் சட்டமும் (TML 002)
3. பிள்ளை ஆதார உதவித் தொகை (TML 003)
4. குற்றவியல் மற்றும் குடும்பச் சட்டம் (TML 004)
5. பிள்ளைக்கான கட்டுக்காப்பும் அணுகல் உரிமையும் (TML 005)
6. குடும்பச் சார்பு உடன்படிக்கைகள் (TML 006)
7. குடும்பச் சட்டச் சமரசம (TML 007)
8. குடிவரவாளர்களாக, அகதிகளாக, மற்றும் குடிவரவு அந்தஸ்து இல்லாதவர்களாக உள்ள பெண்கள் சம்பந்தப்பட்ட குடும்பச் சட்டப் பிரச்சினைகள் (TML 008)
9. குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல் (TML 009)
10. குடும்பச் சட்டத்தில் சொத்து எவ்வாறு பிரிக்கப்படுகிறது (TML 010)
11. திருமணமும் விவாகரத்தும் (TML 011)
12. **வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகை (TML 012)**

* *இந்த சிறுநூல் பல வடிவங்களிலும் பல மொழிகளிலும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. இது பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு www.onefamilylaw.ca என்ற இணையத் தளத்தைப் பாருங்கள். உங்கள் குடும்பச் சட்ட உரிமைகளை நீங்கள் புரிந்து கொள்வதற்கு உதவும் வகையில் இந்த இணையத் தளத்திலும் மேலதிக விடயங்களை நீங்கள் காண முடியும்.*

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

Funded by: / Financé par :
Ontario

இவ் வெளியீடுகளில் தெரிவிக்கப்பட்டு இருக்கும் கருத்துக்கள் பெண்களுக்கான குடும்பச் சட்டக் கல்வி (FLEW) அமைப்பின் கருத்துக்களேயன்றி அவை மாகாண அரசின் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றன எனக் கருத முடியாது.